# நடப்பு நிகழ்வுகள்- ஆகஸ்ட் 08 - 2017

- வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் (Quit India Movement) 75-வது ஆண்டு நினைவு தினம் (8.8.17) கடைபிடிக்கப்படுகிறது. 1942 ஆகஸ்ட் 8-ம் நாள் மகாத்மா காந்தி "செய் அல்லது செத்து மடி" என்று முழங்கி வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை தொடங்கி வைத்தார். இது ஆகஸ்ட் புரட்சி என்றும் அழைக்கப்படுகிறது.

- சூரியன், சந்திரன், பூமி ஆகியவை ஒரே நேர்கோட்டில் சந்திக்கும் நிகழ்வான சந்திர கிரகணம் 7.8.17 அன்று நிகழ்ந்தது.

- ஜப்பான் நாட்டின் தென்மேற்கு பகுதியில் "நொரு" சூராவளி (ஆகஸ்ட் 7, 2017) 162 கி.மீ வேகத்தில் வீசிவருகிறது. "நொரு" என்றால் சிறிய மான் என்று பொருள்படும்.

- மத்திய பால் வள மேம்பாட்டு வாரியம் சார்பில் நாடு முழுவதும் உள்ள மாடுகளுக்கு தனித்த அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. "விலங்கு நல அட்டை" (ஹெல்த் அட்டை) என்ற பெயரில் வழங்கப்படவுள்ளது.

- கடந்த 2016-ஆம் ஆண்டை விட இவ்வாண்டில்(2017) 25 சதவீதம் வரையில் வரித் தாக்கல் செய்வோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனறு மத்திய நேரடி வரி வாரியம் தகவல் வெளியிட்டுள்ளது.

- 8-வது உலக தொழிமுனைவோர் உச்சி மாநாடு இந்தியாவில் 2017 நவம்பர் 28-ல் நடைபெறுகிறது. நிதி அயோக், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் மற்றும் ஆந்திர அரசு ஆகியவற்றுடன் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

- மத்திய குடிநீர் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் புதுடெல்லியில் "ஸ்வச் சர்வேஷான் (கிராமின்) -2017" திட்டத்தை தொடங்கிவைத்தார். இத்திட்டத்தின் நோக்கம் மாநிலங்கள் மற்றும் மாவட்டங்கள் தங்களின் சுகாதாரத்துறை மற்றும் திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்துவதாகும்.

- நெசவாளர்கள் மற்றும் கைவினைஞர்கள் தங்களின் பொருட்களை நேரடியான அமேசான் வாடிக்கையாளருக்கு விற்பதற்கான பயிற்சியை வழங்க அமேசான் இந்திய நிறுவனம் தெலுங்கான மாநில கைத்தறித்துறையுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

- 3-வது தேசிய கைத்தறி தின விழாவில் 2017 – 2018-ம் ஆண்டிற்கான மாநில அளவில் “சிறந்த நெசவாளர் விருது” திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் எம்.ஆர்.ராஜசேகரனுக்கு வழங்கப்பட்டது.

- “வீனஸ்” (Venus) எனும் பெயரில் சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக்கான பிரத்யேக செயற்கைகோளை இஸ்ரேல் நாடு விண்வெளிக்கு அனுப்பியுள்ளது.

- அனைத்திந்திய MCC முருகப்பா தங்கக்கோப்பை ஹாக்கி போட்டி சென்னையில் நடைபெற்றது. இதில் பெங்களூரு ஹாக்கி கழகத்தை தோற்கடித்து எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக்கழகம் (ONGC) வென்றுள்ளது.

- இரட்டை அதிர்வெண் (NASA-L மற்றும் ISRO-S கற்றை) கொண்ட செயற்கைகோளை ஏவுவதற்காக ISRO வும் NASAவும் இணைந்து மேற்கொண்டிருக்கும் கூட்டணியின் பெயர் நிசார் NISAR (NASA-ISRO Synthetic Aperture Rader) ஆகும். இந்த செயற்கைக்கோள் புவியை கண்காணிக்கும் பணியை மேற்கொள்ளும்.

- நீட் தேர்வுக்கு தமிழக மாணவர்கள் தேர்ச்சி பெற 54ஆயிரம் கேள்விகள் அடங்கிய குறுந்தகடு வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் செங்கோட்டையன் கூறியுள்ளார்.

- வீட்டிலிருந்தே தொழில்செய்து வருவாய் ஈட்டும் பெண்களை கௌரவிக்கும் வகையில் “சுயசக்தி விருது 2017” வழங்கப்பட்டது. விவசாயம், கலை மற்றும் கலாச்சாரம், அழகு மற்றும் ஆரோக்கியம், உடல்நலம், விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி, சமூக சேவை, சுய உதவிக்குழு உள்ளிட்ட 12 பிரிவுகளில் 50 பெண்களுக்கு இவ்விருதை பிராண்ட் அவதார் நிறுவனம் வழங்கியுள்ளது.

OXFORD IAS ACADEMY